
# திராவிடத்தால் வாழ்கிறோம்

853

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

---

## இது பெரியார் மண்

ர.பிரகாசு

11

**பகுத்தறிவுக் கொள்கைகளை முழுமையாகக் கடைப்பிடிக்கும் ஊர்களைப் பற்றிய பதிவாக ஒரு தொடர்.**

# கடவுள் மறுப்பு வாசகத்தின் தொடக்கப்புள்ளி!


விடையபுரம் பயிற்சிப் பள்ளியில் கலந்துகொண்ட மாணவர்கள் பெரியாருடன் எடுத்துக்கொண்ட குழுப் புகைப்படம்

2018-ஆம் ஆண்டு திரிபுராவில் பாரதிய ஜனதா கட்சி ஆட்சிக்கு வந்தவுடன் அங்கிருந்த லெனின் சிலை உடைக்கப்பட்டது. அதைப்போல தமிழ்நாட்டிலும் பெரியார் சிலை ஒருநாள் உடைக்கப்படும் என்று பதிவிட்டார் ஒருவர். எதிர்ப்புகள், வழக்குகளுக்குப் பிறகு தனது அட்மின் மீது பழியைத் தூக்கிப்போட்டார். அதுபோல, பெரியார் சிலைக்கு காவிச்சாயம் பூசுவார்கள், செருப்பு மாலை அணிவிப்பார்கள். நீதிமன்றக் கூண்டில் நிறுத்தப்பட்டால், மனநலம் பாதிக்கப்பட்டவர் என்றுசொல்லி பிணை கேட்பார்கள். மறைந்த அரை நூற்றாண்டுக்குப் பிறகும் எதிரிகளை இப்படி பெரியார் அச்சுறுத்துகிறார் என்றால், அவருடைய சித்தாந்தம் ஒரு காரணம். மற்றொன்று, அவரது சிலைக்குக் கீழே பீடத்தில் தவறாமல் எழுதப்பட்டிருக்கும் கடவுள் மறுப்பு வாசகம்.

அந்த கடவுள் மறுப்பு வாசகத்தை அகற்ற வேண்டுமென்று நீதிமன்றம் வரை சென்று போராடிப் பார்த்தார்கள். "யாருக்குச் சிலை வைக்கப்படுகிறதோ அவரின் கருத்துகள் சிலை பீடத்தில் பொறிக்கப்படுவது சரியானதே" என்று கூறி வழக்கை தள்ளுபடி செய்தது சென்னை உயர்நீதிமன்றம். அப்படி கடவுள் மறுப்பு வாசகத்தை பெரியார் முதன்முதலில் கூறிய இடம் திருவாரூர் மாவட்டத்தில் உள்ள விடையபுரம் கிராமத்தில்தான். 1967-ஆம் ஆண்டு திருவாரூர் பகுதியில் ஒரு பயிற்சிப்பள்ளி நடத்த விரும்பிய பெரியார், தனது அணுக்கத் தொண்டரான வி.எஸ்.பி.யாகூப்பிடம் கூறினார்.

காவாலக்குடியைச் சேர்ந்த ச.மாரிமுத்து, ப.நடேசன், வி.எம்.ஆர்.பதி ஆகியோரிடம் வி.எஸ்.பி.யாகூப் ஆலோசித்ததில், அவர்கள் கூறிய இடம் விடையபுரம் பண்ணைத்தோட்டம். இதுதொடர்பாக, வாசுதேவ நாயுடுவிடம் அவர்கள் பேசினர். தனது தந்தையான அப்புசாமி நாயுடு பண்ணையாரிடம் வாசுதேவ நாயுடு இதனைத் தெரிவிக்க, மகிழ்ச்சியோடு ஏற்பாடுகளைச் செய்தார். விடையபுரம் பண்ணை அப்புசாமி நாயுடுவுக்கும் பண்ணையாட்களுக்கும் ஏற்பட்டிருந்த தகராறுகளை பெரியார் தலையிட்டுத் தீர்த்துவைத்தார். அதற்கு விசுவாசமாக இந்த பயிற்சிப் பள்ளியைப் பயன்படுத்திக்கொண்டார் அப்புசாமி நாயுடு.

24.05.1967 அன்று அங்கே பயிற்சிப்பள்ளி தொடங்கியவுடன், பெரியார் தனது கைப்பட கடவுள் மறுப்பு வாசகம் ஒன்றை எழுதித்தந்தார்.

'கடவுள் இல்லை
கடவுள் இல்லை
கடவுள் இல்லவே இல்லை
கடவுளைக் கற்பித்தவன் முட்டாள்
கடவுளைப் பரப்பியவன் அயோக்கியன்
கடவுளை வணங்குகிறவன் காட்டுமிராண்டி
கடவுள் இல்லை
கடவுள் இல்லை
கடவுள் இல்லவே இல்லை'

என்று அவர் எழுதியதை பெரியாரின் உதவியாளர் மகாலிங்கம் வாசிக்க, மாணவர்கள் எல்லோரும் திரும்பக் கூறினர். 07.06.1967 'விடுதலை' இதழில் இதை பதிவுசெய்து, 'கடவுள் வணக்கம்' கூறுவதைப் போல இனி நாம் எல்லா நிகழ்ச்சிகளும் கடவுள் மறுப்பு வாசகத்தைச் சொல்லித்தான் தொடங்க வேண்டுமென்று அறிக்கை விடுத்தார் பெரியார். அன்றுமுதல் இன்றுவரை திராவிடர் கழக நிகழ்ச்சிகளில் கடவுள் மறுப்பு வாசகம் சொல்லப்படுவது வழக்கமான ஒன்று. அத்தகைய வரலாற்றுச்சிறப்பு மிக்க வாசகம் முதன்முதலில் சொல்லப்பட்ட இடம் விடையபுரம். இன்றும் அதற்கான கல்வெட்டு அடையாளங்கள் விடையபுரத்தில் உள்ளன.

காலத்தால் அழியாத இந்த கல்வெட்டு அடையாளம் மட்டுமல்ல, கருப்புச் சட்டைகளும் விடையபுரம் சுற்றியுள்ள பல கிராமங்களில் திராவிடர் கழகத்தின் வீரியமிக்க வரலாற்றுக்குச் சான்றாக இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

அவர்களின் இயக்க வரலாற்றை வரும் வாரம் வாசிப்போம்.

**...பயணிப்போம்.**

---

## உண்மை ஒருநாள் வெளிவரும்!

கீழடியில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வு அறிக்கையினை 'நம்பகத்தன்மை' போதாது என இந்திய தொல்லியல் துறை வெளியிட மறுத்து வருகிறது. காலத்தை வரையறுப்பதில் இன்னும் கூடுதலாக அறிவியல் முறை பயன்படுத்த வேண்டும் எனக் கூறிய நிலையில், தொல்லியல் ஆய்வாளர் அமர்நாத் ராமகிருஷ்ணன் தேவையான விளக்கத்தையும் அளித்துள்ளார். இந்த நிலையில், இந்திய தொல்லியல் துறை இதற்கு முன் வெளியிட்ட அயோத்தித் தொல்லியல் அறிக்கையில் உள்ள குளறுபடிகளை வெளியிட்டு பலரும் விமர்சித்து வருகின்றனர்.

குறிப்பாக, இதற்கு முன் தொல்லியல் துறை வெளியிட்ட அயோத்தி ஆய்வறிக்கையின் சாரம், அயோத்தியில் ஓர் இந்து கோயில் இருந்து இடிக்கப்பட்டு, அங்கு பள்ளிவாசல் கட்டப்பட்டது என்பதாக இருந்தது. ஆனால், அந்த முடிவுக்கு வருவதற்கு சான்றுகள் தெளிவாக இல்லை என 2019-ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றம் தீர்ப்பில் கூறியது. நம்பிக்கையின் அடிப்படையில், இறுதித் தீர்ப்பு அளித்தாலும், இந்தியத் தொல்லியல் துறையின் அறிக்கையினை ஏற்று தீர்ப்பு அளிக்கிறோம் எனக் கூறவில்லை. அதாவது உச்ச நீதிமன்றமே இந்தியத் தொல்லியல்துறையின் அயோத்தி அறிக்கையினை ஏற்கவில்லை.

பேராசிரியர் சூரஜ் பான், ஆர்தர் அலி, ஆர்.எஸ்.ஷர்மா மற்றும் டி.என்.ஜா ஆகிய நான்கு வரலாற்று ஆய்வாளர்களும் தொல்லியல் துறை அளித்த சான்றுகளை ஆய்வு செய்து, பாபர் மசூதிக்கு அடியில் கட்டப்பட்டிருந்தது இந்து கோயில் அல்ல என்று அரசுக்கு அறிக்கை அளித்தனர். குறிப்பாக, 'குறைபாடுடைய தொல்லியல் ஆய்வு' என்றனர். கீழடியில் மேற்கொள்ளப்பட்டது போல, கரிமச் சோதனை மூலமான காலக்கணிப்புகள் எதுவும் அயோத்தியில் மேற்கொள்ளப்படவில்லை. எல்லாவற்றுக்கும் உச்சமாக, அயோத்தி அறிக்கையினை இன்றுவரை பொதுமக்களின் பார்வைக்கு முழுமையாக வெளியிடவே இல்லை, ஏனெனில், வெளியிட்டால் அதிலுள்ள பல ஓட்டைகள் வெளியே தெரிய வரும். அரைகுறை அயோத்தி அறிக்கையினை ஏற்றுக்கொண்ட இந்தியத் தொல்லியல்துறை, தெளிவான கீழடி அறிக்கையினை ஏற்க மறுக்கிறது.

தமிழர்களின் தொன்மையை ஏற்றுக்கொள்ள முடியாமல்தான் இரட்டை நிலைப்பாடு எடுக்கிறது இந்திய தொல்லியல் துறை. ஆனால், உண்மை வலிமைமிக்கது. அது ஆரிய இருளைக் கிழித்துக் கொண்டு ஒருநாள் வெளிவரும்.

---

## ஃப்ளாஷ்பேக்



### கலைஞர் கனவு நனவாகிறது!


சி.வீரகணேசன்

மதுரையின் முதல் மேயர், அண்ணன் எஸ்.முத்து, அவர்களின் சிலை மற்றும் மண்டபத்தை 13.11.1999 அன்று முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் திறந்துவைத்தார். "மண்ணால் சிலை வைக்க வேண்டிய சாதாரண மனிதர் அல்ல மதுரை முத்து, வெண்கலத்தால் சிலை வைக்கப்பட வேண்டிய மாவீரர் அவர்" என்று தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டார். அன்று மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளராக இருந்த நான் இந்நிகழ்வில் நன்றியுரை ஆற்றியது மறக்க இயலா நிகழ்வு. தலைவர் கலைஞரின் கனவு நனவாகி தற்போது, இச்சிலை வெண்கலச் சிலையாக புதுப்பிக்கப்பட்டு, கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களால் வருகிற 31.05.2025 அன்று திறந்து வைக்கப்படவுள்ளது.

**– சி.வீரகணேசன்,**
**மாநில துணைச் செயலாளர்,**
**கழக கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை, மதுரை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

---

## பொய்ப்பெட்டி

கோவி.லெனின்

63

**``கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்...''**

# மாநில உரிமைக் குரலும் -தற்குறிகளின் கதறலும்!



***'பிரதமர் தலைமையிலான நிதி ஆயோக் கூட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் கலந்து கொண்டது தன் குடும்பத்தைக் காப்பாற்றத்தான்' என்று எடப்பாடி பழனிசாமியும், நடிகர் விஜய்யும் அறிக்கை விட்டிருக்கிறார்களே?***

மகன், சம்பந்தி என தன் குடும்பத்தைச் சேர்ந்த இருவர் மீது ரெய்டு-வழக்கு என நடவடிக்கை பாய்ந்ததும், கட்சிக்காரர்களுக்கே காரணம் சொல்லாமல் அவசரமாக டெல்லிக்குப் பறந்து, அங்கு மூன்று கார்களில் மாறி மாறி பயணித்து, உள்துறை அமைச்சர் அமித் ஷாவை சந்தித்து, அ.தி.மு.க. என்ற கட்சியை அடமானம் வைத்துவிட்டுத் திரும்பியவர் எடப்பாடி பழனிசாமி. தன்னுடைய டெல்லி பயண நிகழ்ச்சிகள் இவை இவை என விவரமாக வெளியிட்டு விட்டு நிதி ஆயோக் கூட்டத்தில் கலந்துகொண்ட முதலமைச்சரை நோக்கி கேள்வி எழுப்ப, அடிமைச் சாசனம் எழுதிக்கொடுத்த எடப்பாடி பழனிசாமிக்கு அருகதை உள்ளதா?

'தலைவா' என்ற தலைப்பிலான தன்னுடைய திரைப்படத்தை வெளியிட விடாமல் தடுத்த ஜெயலலிதாவிடம் மன்றாடுவதற்காகத் தன் அப்பாவுடன் கொடநாடு மலையேறி, அனுமதி கிடைக்காமல் காத்திருந்து, அம்மையார் மனது வைத்து கதவைத் திறந்தபோது தடாலென விழுந்து மன்னிப்பு கேட்ட விஜய், இன்று கட்சித் தலைவர் என்ற பெயரில் வெளியிடும் அறிக்கைகள் அவரை நோக்கியே பாயக்கூடியனவாக இருக்கின்றன. அவருக்கு அறிக்கைகள் எழுதிக் கொடுப்பவருக்கு அரசியல் பயிற்சி போதவில்லை என்றுதான் சொல்லத் தோன்றுகிறது.

> **இவர்களின் பொய்க்குற்றச்சாட்டு என்பது தி.மு.க.வையல்ல, உச்சநீதிமன்றத்தையே அவமானப்படுத்துவதாக உள்ளது.**

இந்தியாவின் எதிர்காலப் பொருளாதார வளர்ச்சி குறித்த பிரதமர் தலைமையிலான நிதிஆயோக் கூட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் மட்டுமல்ல, பஞ்சாப், தெலங்கானா, ஜார்கண்ட் உள்ளிட்ட பா.ஜ.க. அல்லாத மாநில முதலமைச்சர்களும் கலந்துகொண்டார்கள். ஒவ்வொருவரிடமும் 5 அல்லது 10 நிமிடங்கள் பிரதமர் தனித்தனியாகவும் பேசியிருக்கிறார். அவரவர் மாநிலம் சார்ந்த திட்டங்களை முன்வைத்துள்ளனர். தமிழ்நாட்டின் திட்டங்களுக்கு நிதி தராமல் புறக்கணிக்கும் ஒன்றிய அரசின் போக்கு குறித்தும், தமிழ்நாட்டிற்குத் தேவைப்படும் நிதி குறித்தும் பிரதமரிடம் விளக்கிய நமது முதலமைச்சர், 'மாநிலங்களுக்கான ஒன்றிய அரசின் நிதி (வரி) பகிர்வு 50% ஆக இருக்கவேண்டும்' என்று அனைத்து மாநிலங்களின் உரிமைக் குரலாக ஒலித்திருக்கிறார். இப்படிப் பேசுவதையெல்லாம் எடப்பாடியாலோ, விஜய்யாலோ இன்னபிற தற்குறிகளாலோ யோசிக்கக்கூட முடியாது.

தங்களைப் போலவே தி.மு.க. தலைவரையும் நினைத்திருக்கும் இவர்கள், டாஸ்மாக் தொடர்பான அமலாக்கத்துறை நடவடிக்கையினால்தான் பிரதமரை முதல்வர் சந்தித்தார் என்று பொய்ப் பிரச்சாரம் செய்கிறார்கள். அமலாக்கத்துறை தன் வரம்பை மீறி செயல்படுகிறது என்று உச்சநீதிமன்றம் உத்தரவிட்டு, அதன் நடவடிக்கைகளுக்குத் தடை விதித்துள்ள நிலையில், இவர்களின் பொய்க்குற்றச்சாட்டு என்பது தி.மு.க.வையல்ல, உச்சநீதிமன்றத்தையே அவமானப்படுத்துவதாக உள்ளது.

**...வினா தொடரும்.**

---

## நம் ஆல்பம்

### தி.மு.க. மூன்றாவது பொது மாநாடு!

1961-ஆம் ஆண்டு, ஜூலை மாதம் 13-ஆம் தேதி முதல் 16-ஆம் தேதி வரை நான்கு நாட்கள் மதுரையில் கழகத்தின் 3-வது பொது மாநாடு சிறப்பாக நடைபெற்றது. கர்நாடகா, ஆந்திராவில் இருந்து கழகத்தினர் பலரும் கலந்து கொண்டனர். மாநாட்டுப் பேருரையாற்றிய பேரறிஞர் அண்ணா, "திராவிட முன்னேற்றக் கழகம் உருவான 12 ஆண்டு காலத்திற்குள், கன்னட – கேரள –ஆந்திர-தமிழக மக்கள், தங்களது இன ஒற்றுமையை உணரும்படிச் செய்திருக்கிறது'' என சிறப்பான உரை நிகழ்த்தினார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131